**செய்தி வெளியீடு எண்:291** **நாள்:17.06.2021**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி செங்கல்பட்டு மாவட்டம், திருநீர்மலை அருள்மிகு ரெங்கநாத பெருமாள் திருக்கோயிலுக்கு கம்பிவட ஊர்தி அமைப்பதற்கான சாத்திய கூறுகள் குறித்து மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. பி.கே.சேகர்பாபு அவர்கள் நேரில் கள ஆய்வு.**

செங்கல்பட்டு மாவட்டம், பல்லாவரம் வட்டத்தில் உள்ள வைணவ தலங்களில் ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப்பட்ட 61–வது திவ்ய தேச தலமான திருநீர்மலை அருள்மிகு ரெங்கநாத பெருமாள் திருக்கோயில் மிகவும் சிறப்பு வாய்ந்ததாகும். இந்த திருக்கோயிலுக்கு வருகைதரும் பக்தர்கள் 288 படிக்கட்டுகள் உள்ளதால் எளிதாக நடக்க இயலாதவர்கள் மற்றும் முதியவர்கள் வசதிக்காக கம்பிவட ஊர்தி (ரோப்கார்) அமைப்பதற்கான சாத்திய கூறுகள் மற்றும் புனரமைப்பு பணிகள் குறித்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்படி பக்தர்களின் நீண்ட நாள் கோரிக்கைகளை நிறைவேற்றும் பொருட்டு இன்று (17.06.2021) மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

மேலும், மலைக்கோயிலுக்கு செல்லும் பக்தர்களின் வசதிக்காக படிக்கட்டுகளில் நிழல் மண்டபங்கள் உபயதாரர்கள் மூலம் புதிதாக கட்டுவதற்கான பணிகளை மேற்கொள்ளுமாறும், அர்ச்சகர்கள் குடியிருப்பு மிகவும் பழுதடைந்துள்ளதால் அவற்றை மராமத்து செய்து புதுப்பிக்கப்பட வேண்டும் அல்லது அவர்களுக்கு நவீன வசதிகளுடன் புதிய குடியிருப்புகள் கட்டுவதற்கு உரிய மதிப்பீடு தயார் செய்து விரைவாக பணிகளை மேற்கொள்ளவும். பக்தர்களின் வசதிக்காக கழிப்பிட வசதி, திருக்கோயில் குளம் சீரமைத்தல், தற்காலிக பணியாளர்களை நிரந்தரம் செய்யவும், காலிப் பணியிடங்களை உடனே நிரப்பவும் நடவடிக்கை எடுக்குமாறு அலுவலர்களுக்கு அமைச்சர் உத்தரவிட்டார்.

இந்த ஆய்வின்போது மாண்புமிகு ஊரக தொழில் துறை அமைச்சர் திரு.தா.மோ. அன்பரசன் அவர்கள், பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் திரு.இ.கருணாநிதி அவர்கள், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் திரு.ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப., அவர்கள், காஞ்சிபுரம் மண்டல இணை ஆணையர் திரு.ஜெயராமன், செங்கல்பட்டு உதவி ஆணையர் திருமதி கவேனிதா, திருக்கோயில் செயல் அலுவலர் திரு.சக்தி மற்றும் பொறியாளர்கள் கலந்துக் கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**